www.Padasalai.Net www.CBSEtips.in

**12ஆம் வகுப்பு**

# உடனடித்தேர்வு ஜூன் - 2023
## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

**கால அளவு : 3.00 மணி நேரம் ]** (வினாத்தாள் விடைகளுடன்) **[ மொத்த மதிப்பெண்கள் : 90**

**அறிவுரைகள் :** **(1)** அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
**(2)** **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். [14 × 1 = 14]

**1.** ‘மீண்டுமந்தப் பழமைநலம் புதுக்கு தற்கு” கவிஞர் குறிப்பிடும் பழமைநலம்
(a) பாண்டியரின் சங்கத்தில் கொலுவிருந்தது
(b) பொதிகையில் தோன்றியது
(c) வள்ளல்களைத் தந்தது
அ) (a) மட்டும் சரி ஆ) (a), (b) இரண்டும் சரி
இ) (c) மட்டும் சரி ஈ) (a), (c) இரண்டும் சரி

**2.** பொய்யா வானம் புதுப்பெயல் பொழிந்தென - அடிக்கோடிட்ட சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) வினைத்தொகை
ஆ) உரிச்சொல் தொடர்
இ) இடைச்சொல் தொடர்
ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

**3.** பொருத்துக
(a) உரிமைத்தாகம் - (i) பாரசீகக் கவிஞர்
(b) அஞ்ஞாடி - (ii) பூமணி
(c) ஜலாலுத்தீன் ரூமி - (iii) பக்தவத்சல பாரதி
(d) தமிழர் குடும்ப முறை - (iv) சாகித்திய அகாதெமி
அ) (a)-(ii), (b)-(iv), (c)-(iii), (d)-(i)
ஆ) (a)-(iii), (b)-(iv), (c)-(i), (d)-(ii)
இ) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
ஈ) (a)-(ii), (b)-(iii), (c)-(iv), (d)-(i)

**4.** “காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை” - இத்தொடரில் ‘கலன்’ உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி
இ) இசைக்கருவி ஈ) வேளாண் கருவி

**5.** படிமம் என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல்
இ) காட்சி ஈ) ஒலி

**6.** பொருத்துக
(a) ஆமந்திரிகை - (i) பட்டத்து யானை
(b) அரசு உவா - (ii) மூங்கில்
(c) கழஞ்சு - (iii) இடக்கை வாத்தியம்
(d) கழை - (iv) எடை அளவு
அ) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)
ஆ) (a)-(iv), (b)-(ii), (c)-(i), (d)-(iii)
இ) (a)-(i), (b)-(ii), (c)-(iii), (d)-(iv)
ஈ) (a)-(iv), (b)-(iii), (c)-(ii), (d)-(i)

**7.** ஆராய்ந்து சொல்கிறவர் :
அ) அரசர்
ஆ) சொல்லியபடி செய்பவர்
இ) தூதுவர்
ஈ) உறவினர்

**8.** ஐம்பெருங்காப்பியம் என்னும் சொற்றொடரைத் தம் உரையில் குறிப்பிட்டவர் :
அ) சிவஞான முனிவர் ஆ) மயிலைநாதர்
இ) ஆறுமுக நாவலர் ஈ) இளம்பூரணர்

**9.** அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் செல்வது :
அ) கடந்தகாலத் துயரங்களை
ஆ) ஆட்களற்ற பொழுதை
இ) பச்சையம் இழந்த நிலத்தை
ஈ) அனைத்தையும்

**10.** ‘சாபவிமோசனம்’ ‘அகலிகை’ கதைகளில் தொன்மங்களைப் பயன்படுத்தியவர்
அ) கு. அழகிரிசாமி ஆ) புதுமைப்பித்தன்
இ) ஜெயமோகன் ஈ) எஸ். இராமகிருஷ்ணன்

**11.** கடலின் பெரியது :
அ) உற்ற காலத்தில் செய்த உதவி
ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
இ) தினையளவு செய்த உதவி
ஈ) பயன் எதிர்பார்த்து ஒருவர் செய்த உதவி

**12.** ‘விளியறி ஞமலி’ -இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ) குதிரை
இ) நாய் ஈ) யாழி

**13.** சிறுபாணாற்றுப்படை காட்டும் பாட்டுடைத் தலைவனின் இன்றைய நிலப்பகுதி :
அ) உதகமண்டலம் ஆ) விழுப்புரம்
இ) திண்டிவனம் ஈ) தருமபுரி

**14.** “உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்” - யார் யார்?
அ) சடாயு, இராமன் ஆ) இராமன், குகன்
இ) இராமன், சுக்ரீவன் ஈ) இராமன், சவரி

### பகுதி - II – பிரிவு - 1

**எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. [3 × 2 = 6]

**15.** கவிஞர் சிற்பி எவற்றை வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்கிறார்?

**16.** நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து யாது?

**17.** பகைவராலும் அழிக்க முடியாத அரண் எது?

**18.** இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் எவ்விதம் புலம்பினர்?



Kindly send me your study materials to padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.Padasalai.Net www.CBSEtips.in



**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. [2 × 2 = 4]

**19.** நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

**20.** எந்தவொரு பொருளைப் பயன்படுத்தும்போதும் அதற்குப் பின்னால் உள்ள மனிதர்களின் உழைப்பை நாம் சிந்திப்பதில்லை. ஒரு தேநீரைப் பருகும்போது, அதற்குப் பின்னால் உள்ள மனித உழைப்பைச் சிந்தித்து உங்கள் கருத்தை எழுதுக.

**21.** பின்னணி இசை, படத்தின் காட்சியமைப்புக்கு எவ்வாறு உயிரூட்டும்? சான்று தருக.

**பிரிவு - 3**

**எவையேனும் ஏழனுக்கு** விடை தருக. [7 × 2 = 14]

**22.** முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.

**23.** மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
விலை, விளை, விழை

**24.** திருவளர்ச்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?

**25.** தொடரில் உள்ள பிழைகளை நீக்கி எழுதுக.
மானம் பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

**26.** படத்திற்குப் பொருத்தமான பின்வரும் திருக்குறளின் விடுபட்ட இடங்களைப் பூர்த்தி செய்க.



சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி .............
ஏமப் .................. சுடும்.

**27.** கீழ்க்காணும் தொடர்களில் அடைப்புக்குள் உள்ள பெயர்ச்சொல்லைத் தொடர்களுக்கு ஏற்றவாறு மாற்றி எழுதுக.
அ) உங்களுக்கு -------------(யார்) நன்மை என நினைக்கிறீர்கள்.
ஆ) நம்முடைய ----------------(தேவை) அளவு குறைந்தால் மகிழ்ச்சி பெருகும்.

**28.** கலைச் சொல்லாக்கம் தருக.
அ) Subscription ஆ) Rubber Stamp

**29.** ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) அறிந்து ஆ) கலங்கி

**30.** ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) வானமெல்லாம் ஆ) பெருங்கடல்

**பகுதி - III – பிரிவு - 1**

**எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. [2 × 4 = 8]

**31.** வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

**32.** "மூன்றான காலம் போல் ஒன்று" - எவை? ஏன்? விளக்குக.

**33.** நாட்டிய அரங்கின் அமைப்பை இளங்கோவடிகள் காட்சிப்படுத்தும் பாங்கு குறித்து உங்கள் கருத்தை எழுதுக.

**34.** அறிவுடை வேந்தனின் நெறி குறித்து, பிசிராந்தையார் கூறுவன யாவை?

**பிரிவு - 2**

**எவையேனும் இரண்டனுக்கு** மட்டும் விடை தருக. [2 × 4 = 8]

**35.** 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வான மெல்லாம்' தொடர் வெளிப்படுத்தும் காட்சி நயத்தை விளக்குக.

**36.** தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?

**37.** சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக

**38.** வேளாண் மேலாண்மை குறித்து நீவிர் பரிந்துரைப் பனவற்றை எழுதுக.

**பிரிவு - 3**

**எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. [3 × 4 = 12]

**39.** அ) நிரல்நிறை அணியைச் சான்றுடன் விளக்குக.

**அல்லது**

ஆ) "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' - இக்குறட்பாவில் பயின்று வரும் அணியை விளக்குக.

**40.** இலக்கிய நயம் பாராட்டுக. (மையக் கருத்துடன் ஏற்புடைய மூன்று நயங்களை எழுதுக.)

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன், திசைகள் கண்டேன்.
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

**– பாரதிதாசன்**

**41.** அ) பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

**அல்லது**

ஆ) பரிசில் துறையைச் சான்றுடன் விளக்குக.

**42.** பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) யானைக்கும் அடி சறுக்கும்

**அல்லது**

ஆ) குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

**43.** தமிழாக்கம் தருக.
1. Knowledge of languages is the doorway to wisdom.
2. A new language is a new life.
3. If you want people to understand you, speak their language.
4. The limits of my language are the limits of my world.

**பகுதி - IV**

**அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. [3 × 6 = 18]

**44.** அ) கவிதை எழுத அறிய வேண்டுவனவாக சுரதா கூறுவனவற்றை விவரிக்கவும்.

**அல்லது**

Kindly send me your study materials to padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

ஆ) எளிய மக்களின் வலிகளை நாட்டுப்புற இலக்கிய வடிவங்களே முழுமையாகப் பிரதிபலிக்கின்றன - நிறுவுக.

**45.** அ) குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப் படுகிறது - எவ்வாறு? விளக்குக.

**அல்லது**

ஆ) "ஒவ்வொரு நகரத்துக்கும் வரலாறும் வடிவழகும் உண்டு" - நீங்கள் பார்த்த அல்லது வாழ்ந்த ஒரு நகரம் குறித்து இருபக்க அளவில் கட்டுரை எழுதுக.

**46.** அ) பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை விவரிக்கவும்.

**அல்லது**

ஆ) மகாநடிகரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் எழுதுக.

**பகுதி - V**

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** [4 + 2 = 6]

அ) "தன்னேர் இலாத தமிழ்" என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ள 'ஓங்கலிடை வந்து' எனத் தொடங்கும் மனப்பாடப் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "உடைத்து" என முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

## விடைகள்

**பகுதி - I**

1. ஈ) (a), (c) இரண்டும் சரி
2. ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்
3. இ) (a)-(ii), (b)-(iv), (c)-(i), (d)-(iii)
4. இ) இசைக்கருவி
5. இ) காட்சி
6. அ) (a)-(iii), (b)-(i), (c)-(iv), (d)-(ii)
7. இ) தூதுவர்
8. ஆ) மயிலைநாதர்
9. ஈ) அனைத்தையும்
10. ஆ) புதுமைப்பித்தன்
11. ஆ) பயன் ஆராயாமல் ஒருவர் செய்த உதவி
12. இ) நாய்
13. இ) திண்டிவனம்
14. இ) இராமன், சுக்ரீவன்

**பகுதி - II - பிரிவு - 1**

15. (i) கடினமான வேலைகளைச் செய்யும் தொழிலாளர்களின் கைகள், மாலை நேரத்தில் சூரியனின் செந்நிறக் கதிர்களால் சிவந்திருக்கிற வானத்தைப் போல் சிவந்து காணப்படும்.
(ii) தொழிலாளர்களின் வியர்வை வெள்ளம் அவர்களின் பருத்த தோள் மீது முத்துகள் சிதறியது போன்று காணப்படும். இவற்றையெல்லாம் வியந்து பாட, தமிழின் துணை வேண்டும் என்று கவிஞர் சிற்பி கூறுகிறார்.

16. நிலையாமை குறித்து, சவரி உரைக்கும் கருத்து: "என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது"

17. பகைவராலும் அழிக்க முடியாத அரண் அறிவாகும். ஏனெனில் அறிவு ஒருவனுக்கு அழிவு வராமல் காக்கும் கருவியாகும்.

18. **இறைமகனாரின் இன்னலைக் கண்டு மக்கள் புலம்பிய விதம்:**
(i) 'இத்தனைக் கொடுமைகளுக்குப் பிறகும் இவ்வுலகம் பிளந்து வெடிக்கவில்லையே!
(ii) வானம் இடிந்து விழவில்லையே
(iii) கடல்நீர் வற்றிப் போகவில்லையே!
(iv) இன்னும் இந்த உலகம் அழியாமல் தாமதிப்பது எதனால்?' என்று கூறிப் புலம்பினர்.

**பிரிவு - 2**

19. (i) 'நடைபெற்றியலும்' (கிளவியாக்கம், 26) என்றும் 'நடைநவின்றொழுகும்' (செய்.135) என்றும் சில சொற்றொடர்களைத் தொல்காப்பியம் கையாண்டிருக்கிறது.
(ii) 'ஆசிரிய நடைத்தே வஞ்சி; ஏனை வெண்பா நடைத்தே கலி' (செய். 107) என்றும் சொல்லுகிறது; 'கவிதையின் இயங்காற்றல்தான் நடை' எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகின்றது.

20. (i) ஒரு தேநீரைப் பருகும் போது அதில் கலந்துள்ள தேயிலைத் தூள், சர்க்கரை, பால் ஆகியவற்றில் எண்ணற்ற தொழிலாளர்களின் உழைப்பு இருப்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
(ii) தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், கரும்புத் தோட்டத் தொழிலாளர்கள், கரும்பிலிருந்து சர்க்கரை எடுக்கும் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், கால்நடைகளைப் பராமரித்து, பால் கிடைப்பதற்கு உழைப்பவர்கள் ஆகிய அனைவரின் உழைப்பும் சேர்ந்துதான் நமக்குத் தேநீர் கிடைக்கிறது.

21. (i) பின்னணி இசை, திரைப்படத்தின் உணர்வுகளை வெளிக்கொண்டு வந்து காட்சி அமைப்பிற்கு உயிரூட்டுகிறது.
(ii) **சான்று :** ஒரு பெண் சன்னல் வழியாக தெருவைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள். அப்போது ஒரு மகிழுந்து புறப்பட்டுச் செல்லும் ஒலி இணைக்கப்படுகிறது. தெருவோ மகிழுந்தோ காட்டப்படவில்லை. ஒலியின் குறிப்பிலிருந்து அவளைப் பார்க்க வந்தவர் புறப்பட்டுவிட்டதை அறிய முடிகிறது.

**பிரிவு - 3**

22. (i) நான் இன்று மாலை ஊருக்கு **முடிந்தால்** வருவேன். உன்னிடம் இருக்கும் புத்தகங்களை எனக்கு **தரலாமே.**
(ii) இவ்வேலையை செய்து **முடித்தால்** பரிசு **தரலாம்.**

23. கார் பருவத்தில் நன்றாக **விளை**ந்ததால் தானியங்களின் **விலை** குறையாமல் இருக்க ஏற்றுமதி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள **விழை**வதாக அரசு அறிவித்தது.

24. (i) 'திருவளர் செல்வன்' சரியான தொடர் ஆகும்.
(ii) 'திருவளர் செல்வன்' என்பது வினைத்தொகை. வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது.

25. **வானம்** பார்த்த பூமியில் பயிறு வகைகள் பயிரிடப்படுகின்றன.

26. இனமென்னும், புணையைச்

27. அ) யாரால் ஆ) தேவையின்

28. அ) உறுப்பினர் கட்டணம் ஆ) இழுவை முத்திரை

29. அ) அறிந்து - அறி + த்(ந்) + த் + உ
அறி - பகுதி
த் - சந்தி 'ந்' ஆனது விகாரம்
த் - இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

www.Padasalai.Net www.CBSEtips.in



ஆ) கலங்கி - கலங்கு + இ
கலங்கி - பகுதி
இ - வினையெச்ச விகுதி

30. அ) வானமெல்லாம் - வானம் + எல்லாம்
**புணர்ச்சி விதி** – உடல் மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே
**சொல் மாற்றம்** - வானம் + எல்லாம்(ம் + எ + மெ) வானமெல்லாம் என்றானது.

ஆ) பெருங்கடல் - பெருமை + கடல்
**புணர்ச்சி விதி** – ஈறு போதல், இனமிகல்
**சொல் மாற்றம்** - பெருமை + கடல்- 'ங்' தோன்றி பெருங்கடல் எனப் புணர்ந்தது.

## பகுதி - III - பிரிவு - 1

31. (i) தாழ்வான பகுதிகளில் பெருகிய வெள்ளத்தை வெறுத்த, வளைந்த கோலையுடைய கோவலர்கள் எருமை, பசு, ஆடு ஆகிய நிரைகளை வேறு மேடான நிலங்களில் மேய விட்டனர்.
(ii) கோவலர்கள் தலையில் சூடியிருந்த காந்தள் மலர்களில் இருந்து வடிந்த நீர்த்துளிகள் அவர்களுக்கு மேலும் குளிரை உண்டாக்கியது.
(iii) குளிரினால் நடுங்கிய அவர்கள் பலருடன் சேர்ந்து கொள்ளி நெருப்பினால் கைகளுக்குச் சூடேற்றி கன்னங்களில் அந்த வெப்பத்தை வைத்துக் கொண்டனர்.

32. (i) கவிஞரின் எண்ணம், அதனை அவர் வெளியிடும் முறை, படிப்பவர் புரிந்து கொள்ளும் முறை (எண்ணம், வெளியீடு, கேட்டல்) ஆகிய மூன்றும் ஒன்றாக இருப்பதில்லை.
(ii) இவை மூன்று ஒன்று எனக் கொண்டால், இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என மூன்று காலங்களும் ஒன்றாக இணைந்தது போல் ஆகும்.

33. **மூங்கில் அளவு :**
(i) சிறந்த சிற்ப ஆசிரியர்களால் சொல்லப்பட்ட இயல்புகள் மாறாத நல்ல நிலத்தை அரங்கிற்காகத் தேர்ந்தெடுத்தனர்.
(ii) பொதிகை மலையில் நீண்ட அளவுள்ள மூங்கிலில், ஒரு சாண் அளவு கணுக்களை உடைய மூங்கிலை கொண்டு வந்தனர்.
(iii) கைப் பெருவிரலில் இருபத்து நான்கு அளவில் அதை வெட்டினர்.
(iv) அதில் ஏழுகோல் அகலம், எட்டுகோல் நீளம். ஒரு கோல் உயரம் உடையதாக அரங்கை அமைத்தனர். மேல் பலகைக்கும் தரைப்பலகைக்கும் இடையே நான்கு கோல் அளவு இருந்தது.

**அரங்கம் அமைத்தல் :**
(i) அரங்கிற்கு செல்லவும் வரவும் இரு வாயில்கள் அமைத்தனர்.
(ii) மேல்நிலையில் ஐம்பூதங்களைக் கொண்டு ஓவியம் வரைந்தனர்.
(iii) தூணின் நிழல் அரங்கில் விழாதபடி அழகான நிலை விளக்குகள் நிறுத்தினர்.
(iv) ஒரு முகத்திரை, பொருமுகத்திரை, கரந்துவரல் திரை மூன்றையும் சிறப்பாக அமைத்தனர்.
(v) ஓவியத்தால் மேற்கூரை அமைத்து அரங்கம் முழுவதும் முத்து மாலைகளைத் தொங்கவிட்டனர். இவ்வாறு நாட்டிய அரங்கம் அமைத்தனர்.

34. அறிவுடைய அரசன், வரிதிரட்டும் முறை அறிந்து மக்களிடமிருந்து வரிதிரட்டினால் நாடு, கோடிக்கணக்கில் செல்வத்தைப் பெற்றுச் செழிப்படையும் என்று பிசிராந்தையார் கூறியுள்ளார்.

## பிரிவு - 2

35. (i) மாலைநேரத்தில் செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் மலையுச்சியின் மீது சென்று மறையும் காட்சியானது, கதிரவன் தன் தலையைச் சாய்த்து உறங்குவது போல் உள்ளது.
(ii) அகதிரவன் மறைகின்ற மாலை நேரத்தில் வானம் முழுவதும் சிவந்த நிறத்தில் காணப்படும். அக்காட்சியானது, வானத்தில் செந்நிறப்பூக்கள் செறிந்து, பூக்காடு போல் காட்சியளிக்கிறது.

36. (i) என் பெற்றோருக்கு உதவியாக பல வேலைகள் செய்வேன். என்னுடைய உடைகளை நானே துவைத்துக் கொள்வேன்.
(ii) அம்மாவும் அப்பாவும் இல்லாத நேரங்களில் வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்வேன்.
(iii) என்னுடைய தேவைகளை நானே பூர்த்தி செய்து கொள்வேன்.
(iv) வீட்டிலுள்ள சிறு சிறு வேலைகளை (சுத்தம் செய்தல், பாத்திரம் கழுவுதல், துணி துவைத்தல்) நானே செய்வேன்.
(v) வீட்டிற்குத் தேவையான பொருட்களை அருகிலுள்ள கடைக்குச் சென்று வாங்கி வருவேன்.

37. **பண்பாட்டு அடையாளங்கள் :**
(i) சென்னையின் புகழ்பெற்ற கட்டடங்களான மத்தியத் தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர்வண்டித் தலைமையகம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம், உயர்நீதிமன்றம், சென்னைப் பல்கலைக்கழகம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா அரங்கு போன்றவை இந்திய - சாரசனிக் கட்டடக் கலையின் சிறப்புகளை நமக்குக் காட்டுகின்றன.
(ii) 'மெட்ராஸ் ரெக்கார்ட் ஆபீஸ்' சாரசனிக் கட்டட முறையில் அமைந்தது. இது, இன்று தமிழ்நாடு ஆவணக் காப்பகம் என்று வழங்கப்படுகிறது.
(iii) எழும்பூர் அருட்காட்சியகமும், கோட்டை அருங்காட்சியகமும் சென்னையின் அடையாளத்தைப் பாதுகாப்பவையாகும்.
(iv) கன்னிமாரா நூலகம் மற்றும் சென்னைத் திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள், திரையரங்கம் ஆகியவை குறிப்பிடத்தக்க அடையாளங்களாகும்.

38. (i) வேளாண்மைக்குள்ளும் மேலாண்மைக் கூறுகள் உண்டு.
(ii) சரியான பயிரைத் தேர்ந்தெடுத்தல்,
(iii) உரிய நேரத்தில் விதைத்தல்,
(iv) நீர் மேலாண்மையை நெறிப்படுத்துதல்,
(v) அறுவடைக்குப்பின் பாதுகாத்தல்,
(vi) உரிய விலை வரும்வரை இருப்பு வைத்தல் என்று ஒவ்வொரு கட்டத்திலும் விழிப்புணர்வும், பொறுப்புணர்வும், நிர்வாக நெறியும், இணைந்தால்தான் வேளாண்மை செழிக்கும்.

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

https://www.Padasalai.Net https://www.CBSEtips.in



**பிரிவு - 3**

39.

**அ)** **அணி விளக்கம் :** சொற்களையும் பொருள்களையும் அந்தந்த வரிசைப்படி அமைத்துப் பொருள் கொள்ள வைத்தல் நிரல்நிறை அணியாகும்.

**சான்று :**

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

**அணிப்பொருத்தம் :** இக்குறட்பாவில் அன்பு, அறன் என்பவற்றை வரிசையாக நிறுத்தி அவற்றோடு தொடர்புடைய பண்பு, பயன் என்பவற்றை முறையே அடுத்த வரிசையில் இணைத்து பொருள் கொள்ளுமாறு அமைக்கப் பெற்றுள்ளது. இதுவே நிரல்நிறையணி ஆகும். அன்பு என்பதே பண்பாகும். அறன் என்பதே பயனாகும் என்று நிரல்பட உள்ளது.

**அல்லது**

**ஆ)** எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி **சொற்பொருள் பின்வரு நிலை அணி**யாகும்.

**அணி விளக்கம்:** செய்யுளில் முன்னர் வந்த சொல்லே, அதே பொருளில் பின்னரும் பல முறை வருவது சொற்பொருள் பின்வரு நிலை அணியாகும்.

**அணிப்பொருத்தம்:** முதலில் வந்த "பொருள்" என்ற சொல், அடுத்தடுத்து வருகிறது. எப்பொருளை யார் யார் சொல்லக் கேட்டாலும் அப்பொருளின் மெய்யான பொருளைக் காண்பதே அறிவாகும்.

40. **திரண்ட கருத்து :** மாலைப் பொழுதில் சூரியன் மறையும்போது அழகான இந்த உலகத்தைக் கண்டேன். அவ்வாறே வானத்தையும் நான்கு திசைகளையும் கண்டேன். பிந்தியந்தக் காரிருள் சிரித்ததுண்டோ? பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான் உன் அழகைச் சிந்தாமல் சிதறாமல் அன்னை வானில் அழகான வாழ்வை சித்தரித்த வண்ணம் நீ.

**மையக் கருத்து :** சூரியன் மாலைப் பொழுதில் எங்கும் அழகாகக் காட்சித் தரும். இந்த உலகத்தை அழகாக வைப்பது நிலவும் சூரியனும்தான்.

**மோனைத் தொடை :** **அ**ந்தியிருளாற் - **அ**வ்வாறே, **பி**ந்தியந்த - **பெ**ருஞ்சிரிப்பின், **சி**ந்தாமல் - **சே**கரித்து

**எதுகைத் தொடை :** அ**ந்**தியிருளாற் - பி**ந்**தியந்தக், சி**ந்**தாமல் - இ**ந்**தாவென்

**இயைபுத் தொடை :** கண்டேன் - கண்டேன்

**அணிநயம் :** உருவக அணி.

41.

**அ)** **திணை விளக்கம் :** பாடு ஆண் திணை பாடாண் திணை பாடப்படுகின்ற ஆண் மகனுடைய புகழ் , வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**சான்று :** காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே; புறம் (பிசிராந்தையார்)

**திணைப் பொருத்தம் :** குறைந்த நிலமாயினும் அதில் விளைந்த நெல்லை உணவாக்கி கவளமாக கொடுத்தால் யானைக்குப் பல நாள்களுக்கு உணவாகும். ஆனால் நூறு வயலாக இருந்தாலும் யானை தனித்து சென்று உண்டால் அது உண்ணும் நெல்லைவிட காலில் அழிந்து போதும் நெல்லே அதிகமாக இருக்கும். அது போல அறிவுடைய வேந்தன் மக்களிடமிருந்து வரியைத் திரட்டும் போது முறை அறிந்து செயல்பட்டால் மன்னனும், மக்களும் நாடும் சிறக்கும். இப்பாடலில் மன்னன் முறை அறிந்து வரி பெற வேண்டும் சுட்டிக்காட்டியதால் இது பாடாண் திணைக்கும் பொருத்தமாயிற்று.

**அல்லது**

**ஆ)** **துறை விளக்கம் :** பரிசு வேண்டி மன்னனின் வாயிலில் நிற்பது பரிசில் துறையாகும்.

**சான்று :** வாயிலோயே! வாயிலோயே!
வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி ......
- புறநானூறு

**துறைப் பொருத்தம் :** பொருள் வேண்டி தன்னை நாடி வருவோருக்கு இல்லை என்று சொல்லாது வாரி வழங்கும் மன்னனின் வாயிற் காவலனே. பரிசில் பெறுபவர்க்கு உரிய பரிசினைப் பெற எப்போதும் திறந்த வாயிலை உடையது நெடுமான் அஞ்சியின் அரண்மனை என்று பாடுவதிலிருந்து நெடுமான் அஞ்சியின் வள்ளல் தன்மை வெளிப்படுகிறது. நெடுமான் அஞ்சியின் கொடையை நோக்கி பரிசில் பெறுபவர் அரண்மனையின் வாயிலில் நிற்பது பரிசில் துறையாகும்.

42.

**அ)** **யானைக்கும் அடிசறுக்கும்**

**பழமொழி விளக்கம் :** எப்போதும் வெற்றி பெறுபவர் ஏதாவது ஒரு நேரத்தில் தோல்வி அடையக் கூடும். இதனை 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பார்கள்.

**வாழ்க்கை நிகழ்வு :** தியா பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவி. நன்கு படித்து வகுப்பில் முதல் மாணவியாக வருவாள். அனைத்து போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றி பெறுவாள். ஆண்டு இறுதி தேர்வு நடந்து கொண்டிருந்தது. அவளுக்கு திடீரென்று உடல்நிலை சரியில்லை. அவளால் தேர்வுக்கு படிக்க முடியவில்லை. அதனால் சரியாக தேர்வும் எழுத முடியவில்லை. எப்போதும் அனைத்து பாடங்களிலும் முதல் மதிப்பெண் பெற்ற தியா இந்தத் தேர்வில் குறைந்த மதிப்பெண் பெற்றாள். இது 'யானைக்கும் அடி சறுக்கும்' என்பது போல் உள்ளது.

**நீதி :** நாம் எப்போதும் வெற்றி பெற்று கொண்டே இருப்போம் என்ற எண்ணம் இருக்கலாம். ஆனால் சில நேரங்களில் தோல்வியையும் அடையக் கூடும். இதுவே "யானைக்கும் அடிசறுக்கும்" என்ற பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

**அல்லது**

**ஆ)** **குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை**

**பழமொழி விளக்கம் :** நாம் பிறருடைய குற்றங்களைப் பெரிதுபடுத்தக் கூடாது. அவ்வாறு செய்தால் நமக்கென்று உறவுகளோ நட்போ இருக்காது. இதனைக் 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்பர்.

**வாழ்க்கை நிகழ்வு :** தர்ஷிணி, லக்ஷயா, ரோஷிணி மூவரும் தோழிகள். ரோஷிணி எப்போதும் சிறு பிள்ளையாக நடந்து கொள்வாள். எதைப் பற்றியும் சிந்திக்காமல் பேசுவாள். இது மற்றவர்களைக் காயப்படுத்தும். இவள் இப்படி நடந்து கொள்வது தர்ஷிணிக்கும் லக்ஷயாவுக்கும் பிடிக்காது. ரோஷிணியின் குறைகளை எடுத்து சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இதனால் ரோஷிணிக்கு இருவரையும் பிடிக்காமல் போய்விட்டது.

enquiry@surabooks.com Ph:8124201000 / 8124301000
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

நட்புடன் இருந்த அவர்களும் பிரிந்து விட்டார்கள். இதுவே 'குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை' என்ற பழமொழிக்கேற்ப உள்ளது.

**நீதி :** நாம் எப்போதும் ஒருவருடைய குறைகளை மட்டுமே பார்க்கக் கூடாது. அவர்களின் நல்ல குணங்களையும் நாம் பார்த்து அவர்களைப் பாராட்ட வேண்டும். இல்லையெனில் நட்போ, உறவோ நிலைத்து இருக்காது என்பதே பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

43. 1. பன்மொழி அறிவானது, ஞானத்தின் நுழைவாயில் ஆகும்.
2. புதிய மொழி என்பது புதிய வாழ்க்கை போன்றது.
3. உங்களை மக்கள் புரிந்து கொள்ள வேண்டுமென்றால், நீங்கள் அவர்களது மொழியிலேயே உரையாட வேண்டும்.
4. என்னுடைய மொழியின் எல்லையே என்னுடைய உலகத்தின் எல்லை ஆகும்.

**பகுதி - IV**

44.

அ) **முன்னுரை :** கவிஞர் சுரதாவின் 'துறைமுகம்' என்ற கவிதைத் தொகுப்பில் உள்ள 'இதில் வெற்றிபெற' என்ற கவிதையில் கவிதை எழுதுவதற்கு நாம் அறிய வேண்டியவற்றைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

**கவிதை இலக்கணம் :** கவிதை என்பது சொல்லைச் சேர்க்கின்ற நேரத்தில், எதுகை, மோனை, இயைபு போன்ற தொடை நயங்களைக் கொண்டும் செய்யுள் உறுப்புகளைக் கொண்டும், இயற்றப்படுவதே கவிதை ஆகும்.

**கவிதை எழுத அறிய வேண்டுவன :**

(i) யாப்பின் உறுப்புகளாகிய எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறையும் கொண்டு கவிதை எழுதப்பட வேண்டும்.

(ii) எழுத்துகள் ஒன்றோடொன்று சேர்கிற போது அசைகள் வரும். அசை நேரசை, நிரையசை என இரு வகைப்படும்.

(iii) இரண்டு சீர்களின் இடையில் தளைகள் வரும். தளைகள் ஏழு வகைப்படும். தளைகள் பல சேர்ந்து அடிகளாக உருவாக்க வேண்டும்.

(iv) அடியின் கீழே அடி அமைந்திருந்தால் தொடைகள் வரும்.

(v) தொடை எட்டு வகைப்படும் அவை நன்கு சரியாக வந்தால் பாக்கள் உண்டாகும்.

(vi) சீர் மாச்சீர், விளச்சீர், காய்ச்சீர், கனிச்சீர் என நான்கு வகைப்படும். வெண்பாவின் இறுதிச்சீர் காசு என முடியும்.

(vii) ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, என பா நான்கு வகைப்படும். இவற்றை எல்லாம் நன்கு தெரிந்து கொண்டு கவிதை எழுத வேண்டும். மிகச் சாதாரணமாக பாரமர மக்களுக்கும் புரியும்படியாக தமிழ்க் கவிதைகள் எழுத வேண்டும்.

**முடிவுரை :** சிறந்த படைப்புகளை உருவாக்க கல்வி பெரும் துணையாக உள்ளது. அக்கல்வியை நம் முன்னோர்கள் போல் மிகவும் நுட்பமாக, ஆய்வு நோக்கில் கற்க வேண்டும். இவற்றையெல்லாம் அறிந்து கொண்டு கவிதை இயற்றுபவர்களுக்கே புகழும் சிறப்பும் கிடைக்கும் என்று சுரதா கூறுகிறார்.

**அல்லது**

ஆ) **முன்னுரை :** வாய்மொழி இலக்கியம் என்று அழைக்கப்படுவது நாட்டுப்புற இலக்கியமாகும். பாமர மக்களால் வாய்மொழியாக கூறப்பட்டு வந்த பாடல்கள், கதைகள், பழமொழிகள், விடுகதைகள் முதலானவை இவற்றுள் அடங்கும். பழமைக்கு பழமையாய் புதுமைக்கும் புதுமையாய் விளங்கும் இது எளிய மக்களின் வலிகளை எவ்வாறு பிரதிபலிக்கின்றன என்பதைப் பற்றிக் காணலாம்.

**நாட்டுப்புறப் பாடல்கள் :**

"வேகாத வெயிலுக்குள்ள ஏதில்லலோ லேலோ
விறகொடிக்கப் போற பெண்ணே எதில்லலோ லேலோ"

சுட்டெரிக்கும் வெயிலில் காலில் செருப்பின்றி யாருமற்ற காட்டுவழியில் கல், முள் குத்துவதையும் பொறுத்துக் கொண்டு, விறகை சுமந்து வரும் பெண்ணின் வறுமைத் துன்பத்தை இப்பாடல் வரி விளக்குகிறது. இவ்வாறு உழவர் மழைக்காகவும், குழந்தைப் பாலுக்காகவும், மக்கள் வீடின்றியும் துன்பப்படும் காட்சிகளை நாட்டுப்புறப் பாடல்களில் வெளிப்படையாக இருந்தன.

**கதைப் பாடல்கள் :** அண்ணமார் கதைப் பாடல்களாக இன்றும் கிராமங்களில் பாடி நடிக்கப்பட்டு வருகின்றன. பொன்னர் சங்கர் தங்களின் சோகம் நிறைந்த குடும்பப் பின்னணியை விவரிக்கிறது. ஜம்புலிங்கம் கதைப் பாடல், சந்தனத் தேவன் கதைப்பாடல் கவட்டை வில் கருவான் போன்ற கதைப்பாடல்களில் மனிதருள் வீரனாக, மக்களுக்காக உழைத்து மக்களின் நலனில் ஈடுபாடும் கொண்டு வாழ்ந்தனர். கடைசியில் சுடப்பட்டு இறந்த வலியை இக்கதைகள் பாடுகின்றன.

**பழமொழிகள் :** நாட்டுப்புறப் பழமொழிகள் மக்களின் எண்ணம், உணர்ச்சி, வாழ்க்கை நெறிமுறை முதலிய அனைத்தையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றன.

"உழுகிறவர்கள் கணக்குப் பார்த்தால்
உழவுக்குக் கூட மிஞ்சாது"- இப்பழமொழி வியர்வை சிந்தி, வெயிலிலும், மழையிலும், பகலிலும், இரவிலும் வேலைப் பார்க்கும் விவசாயிகள் அறுவடைக்குப் பிறகு அடுத்த உழவுக்குக் கூட பணம் பொருள் இல்லாத வலியை எடுத்துரைக்கிறது.

**விடுகதைகள் :** இதுவும் நாட்டுப்புற இலக்கிய வகைகளுள் ஒன்றாகும்.

"வந்தும் கெடுக்கும் வராமலும் கெடுக்கும்
அது என்ன?" - **விடை :** மழை

மழையானது பொய்த்துப் போனால் ஏழை விவசாயிகள் வறட்சியால் உணவின்றி தற்கொலை செய்து கொள்ளும் நிலை ஏற்படுகிறது. அதே மழை அளவுக்கு அதிகமாகப் பொழிந்தால் வெள்ளம் ஏற்பட்டு பொருள் சேதம் அடைகிறது.

**முடிவுரை :** நாட்டுப்புற இலக்கிய வடிவங்கள் எளிய மக்களின் வலிகளை முழுமையாகப் பிரதிபலிக்கின்றன என்பதை மேற்கண்ட எடுத்துக்காட்டுகளில் காணலாம்.

45.

அ) **முன்னுரை :** குடும்பம் என்னும் சிறிய அமைப்பிலிருந்தே மனித சமூகம் என்னும் பரந்த அமைப்பு கட்டமைக்கப்படுகிறது. குடும்பம் என்ற இந்த உயர்ந்த அமைப்பின் மூலமே உலகச் சமூகம் இயங்கி வருகிறது. சங்க காலத்தில் குடும்ப அமைப்பு மேலோங்கிய ஒன்றாக இருந்தது என்பதைக் குறித்து இங்குக் காண்போம்.

**குடும்பம் என்னும் சொல் :** குடும்ப அமைப்பு ஏற்படுவதற்கு அடிப்படை திருமணம் ஆகும். நாணயத்தின் இரு பக்கங்களைப் போல குடும்பமும் திருமணமும் சார்ந்தே செயல்படுகின்றன.

திருமணம், குடும்பம் என்னும் சொல் முதன் முதலில் திருக்குறளில் தான் பயின்று வருகிறது. குடும்பு என்னும் சொல்லுடன் 'அம்' விகுதி சேர்ந்து 'குடும்பம்' என்றானது. குடும்பு என்றால் கூடி வாழ்தல் என்று பொருள்.

**குடும்பங்களின் வாழிடங்கள் :** தற்காலிகமாகத் தங்கும் இடம் 'புக்கில்' ஆகும். திருமணத்திற்குப் பிறகு கணவனும் மனைவியும் பெற்றோரிடமிருந்து பிரிந்து தனியாக வாழுமிடம் தன்மனை ஆகும்.

கணவனின் இல்லம் நும்மனை
மனைவியின் இல்லம் தம்மனை

மணம் புரிந்து கணவனும் மனைவியும் சேர்ந்து வாழும் இல்லற வாழ்வின் தொடக்கமே மணந்தகம் ஆகும். தனிக்குடும்ப உருவாக்கத்தின் தொடக்க நிலையாக இது அமைகிறது.

**தாய் வழிக்குடும்பம் :** சங்க காலத்தில் கண சமூகத்துக்கு தாயே தலைமை ஏற்றிருந்தாள். பெண் திருமணம் செய்த பின்னரும் தன் இல்லத்திலேயே தொடர்ந்து வாழ்க்கை நடத்தும் தாயமுறை இருந்தது. குடும்பத்தின் சொத்தும் வளங்களும் பெண்களுக்குச் சென்று சேர்ந்தன என்று குறுந்தொகையில் உள்ள மருதத்திணை பாடல் ஒன்று கூறுகிறது.

**தந்தை வழிக்குடும்பம் :** மணமக்களின் வாழ்விடம் கணவன் மனை என்றானது. பெண் தன் கணவனையே சார்ந்து இருந்தாள். இது ஒரு வலுவான பரவலான முறையாக இருந்தது.

மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே **(குறுந் – 135)**

**தனிக் குடும்பம் :** தாய், தந்தை, குழந்தை என மூவருமுள்ள குடும்பம் தனிக்குடும்பம் ஆகும். இது மிகவும் நெருக்கமானதும் எளியதுமான குடும்பமாகும். தனிக்குடும்ப முறை, சமூகப்படி நிலையில் இறுதியாக ஏற்பட்ட ஒன்றாகும்.

**விரிந்த குடும்பம் :** சங்ககாலத்தில் தனிக்குடும்ப அமைப்பு விரிவடைந்து இவர்களுடன் பெற்றோர் ஒருவரின் தந்தையும் உடன் வாழும் விரிந்த குடும்ப அமைப்பு முறை உருவானது.

**முடிவுரை :** சங்ககாலச் சமூகம், குடும்பம் என்ற அமைப்பை அடிப்படை அலகாகக் கொண்டிருந்த நிலையைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. இன்றைய சமூக அமைப்பும் கூட்டுக் குடும்பம், தனிக்குடும்பம் என்ற அலகுகளைக் கொண்டதாக இருக்கின்றது. தொன்மைமிக்க இக்குடும்ப அமைப்பு முறை தமிழ்ச் சமூகத்தின் அடையாளமாகும்.

**அல்லது**

ஆ) **முன்னுரை :** தமிழ் மண்ணில் ஆற்றங்கரை நகரங்கள், கடற்கரை நகரங்கள் ஆகியவற்றைப் பற்றிய பதிவுகள் வரலாற்றின் பக்கங்களை ஆளுகின்றன. இந்தியாவில் மூன்று நூற்றாண்டுகளாக ஆங்கிலேயர்களின் ஆட்சிக்கு அடித்தளமாகவும் அதிகார மையமாகவும் விளங்கிய கடற்கரை நகரமே மதராசப்பட்டினம். அது இன்று சென்னை மாநகரமாக வளர்ந்திருக்கிறது. அந்நகரம் குறித்துக் இக்கட்டுரையில் காண்போம்.

**சென்னையின் தொன்மை :** குடியம், அத்திரம்பாக்கம் போன்ற பகுதிகள் ஒரு இலட்சம் ஆண்டுகள் பழமையானது. கொற்றலையாறு மனித நாகரிகத்தின் முதன்மை களமாகும். பல்லாவர கற்கோடாரி அகழ்வாய்வில் பெரும் திருப்புமுனை ஏற்படுத்தியது. கி.பி.2ஆம் நூற்றாண்டு தாலமி குறிப்பிட்ட மல்லியர்பா துறைமுகம் என்பதே இன்றைய மயிலாப்பூர் ஆகும். ஆயிரம் ஆண்டுகள் பழைமையான திருவொற்றியூர், திருவான்மியூர் போன்ற கோயில்கள் அமைந்துள்ளன. கி.பி. 12 - 13 ஆம் நூற்றாண்டுகளில் புகழ்பெற்ற கிராமங்களாக கோயம்பேடு, தாம்பரம் போன்றன விளங்கின.

**முக்கிய ஆறுகள் மற்றும் கால்வாய்கள் :** கொற்றலையாறு, கூவம், அடையாறு, பாலாறு, பக்கிங்காம் கால்வாய், காட்டன் கால்வாய், விருகம்பாக்கம் கால்வாய், ஓட்டேரி நல்லா போன்றவை முக்கிய நீர்நிலைகளாக விளங்கின. மயிலாப்பூருக்கு வடக்கே குப்பங்கள் இருந்த பகுதியின் இருபுறமும் கூவம் நதி அழகான ஆறாக கரைபுரண்டு ஓடியது. அது 'திருவல்லிக்கேணி ஆறு' என்றும் அழைக்கப்பட்டது.

**நகரம் உருவாக்கம் :** ஆங்கிலேயர் வருகைக்குப் பின் கட்டப்பட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் உள்பகுதி 'வெள்ளையர் நகரம்' என்றும் வெளிப்பகுதி 'கறுப்பர் நகரம்' என்றும் அழைக்கப்பட்டன. வடசென்னைப் பகுதிகள் 'மதராசப்பட்டினம்' என்றும் தென்சென்னைப் பகுதிகள் 'சென்னைப் பட்டினம்' என்றும் அழைக்கப்பட்டன. ஆங்கிலேயர் இவ்விரண்டையும் இணைத்து 'மதராஸ்' என அழைத்தனர். அதுவே 'மெட்ராஸ்' என்று மருவி இன்று சென்னையாக பெயர் மாற்றமடைந்துள்ளது.

**பண்பாட்டு அடையாளங்கள் :** சாரசனிக் கட்டட முறையில் ஆங்கிலேயர் அமைத்த 'மெட்ராஸ் ரெக்காட் ஆபீஸ்' (தற்போது தமிழ்நாடு ஆவணக்காப்பகம்), எழும்பூர் அருங்காட்சியகம், கோட்டை அருங்காட்சியகம் திரைப்படத் தொழில் சார்ந்த இடங்கள் பண்பாட்டு அடையாளங்களாகத் திகழ்கின்றன.

**இந்தோ–சாரசனிக் கட்டடக்கலை :** முகலாய, பிரித்தானிய மற்றும் இந்திய பாரம்பரிய பாணி மூன்றும் கலந்த கட்டடக் கலையான இந்தோ-சாரசனிக் கலைக்கு எடுத்துக்காட்டுகளாக சேப்பாக்கம் அரண்மனை, மத்தியத் தொடர்வண்டி நிலையம், தென்னகத் தொடர்வண்டி தலைமையகம், எழும்பூர் தொடர்வண்டி நிலையம், பொது அஞ்சல் அலுவலகம், உயர்நீதிமன்றம், சென்னைப் பல்கலைக்கழகம், ரிப்பன் கட்டடம், விக்டோரியா அரங்கு போன்றவை திகழ்கின்றன.

**சென்னை நூலகங்கள் :** சென்னை இலக்கியச் சங்கம், கன்னிமாரா பொது நூலகம் (இந்தியாவின் முதல் பொது நூலகம்) கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகம், தமிழாய்வு நூலகங்கள் உள்ளன.

**சென்னை–நம்பிக்கை மையம்:** சென்னையை மையமாகக் கொண்டு உருவான தொழிற்சாலைகளும் கணினி நிறுவனங்களும் நேரடி, மறைமுக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தியுள்ளன.

**போக்குவரத்து :** 1856-இல் தென்னிந்தியாவின் முதல் தொடர்வண்டி நிலையம் இராயபுரத்தில் அமைக்கப்பட்டது. சாலைப்போக்குவரத்து, தொடர்வண்டி போக்குவரத்து, துறைமுகம், விமானநிலையங்கள் சென்னையில் சிறப்பாக வளர்ச்சியடைந்துள்ளன.

**அறிவின் நகரம் :** சென்னையில் இந்திய விடுதலைக்கு முன்னரும் பின்னரும் உருவாக்கப்பட்ட பல கல்வி நிறுவனங்கள் சென்னையை அறிவின் நகரமாக மாற்றியுள்ளன. 19ஆம் நூற்றாண்டில், கல்வி வளர்ச்சியின் உடனிகழ்வான அச்சுப்பரவல், நாளிதழ் பெருக்கம் ஆகியவை சென்னையின் அறிவு வளர்ச்சிக்குத் துணை நின்றன.

**முடிவுரை :** சென்னை மாநகருக்கென்று இருக்கின்ற தனித்துவமான அமைப்பு, வரலாற்றுத் தடங்கள் ஆகியவற்றை சிதைத்து விடாமல் அதன் வடிவழகைப் பாதுகாக்க வேண்டும்.

46.

அ) **முன்னுரை :** உத்தமசோழன் எழுதிய 'முதல்கல்' கதை நமக்கு பாடமாக அமைந்துள்ளது. பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊரைத் தன் பொறுப்புணர்வால் மாற்றிய மருதனின் பண்பு நலத்தை இக்கதையின் மூலம் அறிந்து கொள்வோம்.

https://www.Padasalai.Net https://www.CBSEtips.in



**மருதனின் பொறுப்புணர்வு :** வளவனாற்றின் வடகரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை பச்சைப் பசேல் என்று விரிந்து கிடந்த வயல்வெளிகள். அடர்பச்சையில் தீவுபோல ஊர்க்குடியிருப்பும், மரங்களுக்கிடையில், வயல்வெளி எங்கும் நடவு முடிந்து ஒரு வாரம் பத்து நாளான பச்சை பிடிக்கத் தொடங்கியிருந்த இளம்பயிர், வெளிர்பச்சையில். இப்போதோ சற்றுப் பொறுத்தோ நீருக்குள் மூழ்கிவிடும் ஆபத்தில் இருந்தது.

**மருதனின் யோசனைகள் :** அதோடு நில்லாமல் வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் மேலும் வலுப்பெற்று மேற்கு வடமேற்காக நகரக்கூடும். இதன் விளைவாக அடுத்த நாற்பத்தெட்டு மணி நேரத்திற்கு நாகப்பட்டினம், கடலூர் உள்ளிட்ட கடலோர பகுதிகளில் பலத்த மழைபெய்யக்கூடும். இப்படி வாடிக்கையான செய்திகளைக் கேட்ட மருதன் 'எந்த மழையின் உதவியில் நட்டார்களோ அதே மழையின் "அபரிமித அன்பினால் இப்போது பயிர் தெப்பலாடுகிறது. ஒருநாள் மூழ்கினால் போதுமே முழுவதும் அழுகிவிடுமே. மறுபடி புதிதாக நாற்றுவிட்டு புதிய சாகுபடிதான். அதற்கு யாரால் முடியும்? என்ன செய்யலாம்" என்று மருதனுக்கு ஆயிரம் யோசனைகள்.

**மருதனின் மகிழ்ச்சி :** ஊரைச் சுற்றி வளைந்து ஓடிவரும் மூன்று மைல் நீள வடிவாய்க்கால் முழுவதுமே சுவர் வைத்துத் தடுத்ததைப் போல் காடாய் மண்டிக் கிடக்கும் நெய்வேலி காட்டாமணக்குச் செடிகளைப் பிடுங்கி எறிந்தால் போதும். ஒரே நாளில் உபரி நீர் முழுவதும் வடிந்து விடுமே.

பயிர்கள் மூழ்காமல் மொத்தக் கிராமமும் தப்பித்துக் கொள்ள வழி கண்டுபிடித்து விட்ட சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தான் மருதன். தன் முயற்சியால் வடிவாய்க்காலில் ஜில்லென்ற இடுப்பளவு தண்ணீரில் தன்னந்தனியே நின்றபடி மண்டிக் கிடந்த காட்டாமணக்குச் செடிகளை 'சரக் சரக்' என்று அறுத்து மேலே எறிந்து கொண்டிருந்தான் மருதன்.

**ஊர் மக்கள் வருதல் :** மருதனின் மனைவி அல்லி, தன் கணவன் படும்பாட்டைக் கண்டு திகைத்து, தன்னை அறியாமலேயே புடவையை வரிந்துக் கட்டி வாய்க்காலில் இறங்கினாள். அடுத்த சில நிமிடங்களில் ஊர் மிராசு காளியப்பன் வண்டியிலிருந்து குதித்து வாய்க்காலில் இறங்கினார். வண்டிக்காரன் மூலம் செய்தி ஊர் முழுவதும் பரவியது. ஊர் மக்கள் செய்தி அறிந்து மதகை நோக்கி வரத் தொடங்கினார்கள். ஊரே கூடி வாய்க்காலை தூய்மை செய்தனர்.

**முடிவுரை:** ஊரில் யாருக்கும் இல்லாத அக்கறை மருதனுக்கு இருந்ததைப் பார்க்கும்போது, தன் பொறுப்புணர்வால் பொறுப்புணர்ச்சியின்றி இருந்த ஊர் மக்களை மாற்றிய மருதனின் பண்பு நலம் தெளிவாகத் தெரிகிறது. ஊர்க்கூடி தேர் இழுத்தால் அது தானாக சேர வேண்டிய இடத்தில் வந்து நிற்கும்

**அல்லது**

**ஆ) முன்னுரை :** நடிப்புலகின் சக்ரவர்த்தி என எல்லோரும் வியக்கின்ற மகத்தான நடிகர் சிவாஜி கணேசன். தான் ஏற்றுக்கொண்ட கதாபாத்திரத்திற்கு உயிர் அளித்துத் தன் வசனத்தாலும் உடல் அசைவுகளாலும் உருட்டுவிழி நகர்வாலும் காண்பவர்களைக் கட்டிப்போட்டு விடுகின்ற கலைஞர், அவரைக் கண்ட பாலச்சந்திரனின் மனவோட்டத்தை நயத்துடன் இங்குக் காண்போம்.

**சிவாஜியுடன் சந்திப்பு :** ஒரே சீராய் அடி எடுத்து வைத்து ஒவ்வொரு பாத அடி வைக்கும் போது மறுதோள் முன்னோக்கி சாய, தலை நிமிர்ந்து, நெஞ்சு விரித்து, இசைக்கு அசைப்பது போல கைகள் வீசி, பார்வை இமை அசையாது மெல்ல மெல்ல சிங்க நடை நடந்து வரும் அந்த மகா நடிகனைப் பார்த்த போது துள்ளி எழுந்தேன் என பாலச்சந்திரன் குறிப்பிடுகிறார்.

அவரின் புருவங்களையும் கண்களையும் முக அபிநயங்களையும் உதடுகளையும் கைவிரல்களையும் தாள, லய அபிநயங்களையும், சலனங்களையும் பார்த்துக் கொண்டு நிசப்தனாய் அமர்ந்திருந்தார்.

**சிவாஜியின் கதாப்பாத்திரங்கள் :**

(i) ஊழித் தாண்டவமாடும் ருத்ரன்
(ii) கவச குண்டலம் கொடுத்த கர்ணன்,
(iii) காளமேகத்தில் கவிதை ததும்பச் செய்த கவிகுல குரு காளிதாசன்
(iv) அமிழ்தத் தமிழ்மொழியின் உன்னதக் கவியான பாரதி
(v) தாய்த் தமிழ் மண்ணின் வீர தீரச் சந்ததியான வீரபாண்டிய கட்டபொம்மன்
(vi) சோழன் குலோத்துங்கச் சூரியனான இராஜராஜசோழன் என சிவாஜி கணேசனின் கதாபாத்திரங்கள் அவரின் மன அடுக்குகளில் பின்னி மறைந்தது.

**எளிமை :** சிவாஜி பாலச்சந்திரனைப் பார்த்து, கவிஞரா? எனக் கைகூப்பி வணக்கம் செய்தார். காவியக் கலையிடம் மூத்த திராவிடனுக்கு இருக்கும் ஆழ்ந்த ஆதரவையும் மரியாதையையும் சிவாஜியிடம் இருந்ததை இவரால் புரிந்து கொள்ள முடிந்தது.

**வசனம் :** கட்டபொம்மன் நாடகவசனம் நினைவிருக்கிறதா? என ராஜீவ்நாத் கேட்க மிக எளியாக அதை நினைவு கூர்ந்து. "நீர் ஏர் பிடித்தாயா? களை வெட்டினாயா? கஞ்சிக்கலயம் சுமந்தாயா? என கொஞ்சமும் மறக்காமல் ஏற்ற இறக்கத்துடன் ஒரே மூச்சில் சொல்லி முடித்தார்". சிவாஜியும், மலையாளத்தில் சரித்திர புராண நாடகங்கள் இல்லையா? எனக் கேட்டபோது பாலச்சந்திரன், லங்கா லக்ஷ்மியில் இராவணனின் வசனத்தை சொல்லி முடித்தார். சிவாஜி கணேசன் ஒரு சாதாரண மனிதனைப் போலக் கேட்டுக் கைதட்டினார், பாராட்டினார்.

**முடிவுரை :** சிவாஜி அவர்கள் தங்கள் குடும்பத்துடன் எங்களை வாசல்வரை வந்து வழியனுப்பினார்கள். கையசைத்து நிற்கும் அவரை மறையும் வரையில் பார்த்துக் கொண்டே வந்தார் என தனது மனவோட்டத்தை பாலச்சந்திரன் மிகத் தெளிவாக நயத்துடன் பதிவு செய்திருக்கிறார்.

47.

**அ)** ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னோர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ். **பா வகை : நேரிசை வெண்பா**

**– தண்டி**

**ஆ)** உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து. **– திருவள்ளுவர்**

☆ ☆ ☆

enquiry@surabooks.com Kindly send me your study materials to padasalai.net@gmail.com Ph: 8124201000 / 8124301000